# சாயா சான்

## பர்மாக் கலகத் தலைவன்



SAYA SAN.

ஆசிரியர் :

. ஜி. நாயர்.

பிரஸ் கோட்டையூர்.

1931.

# "THE BURMESE REBELLION"

Mr. V. R. M. Chettiar, B. A.

*Writes:—*

Mr. V. G. Nair who has recently returned from Burma has critically studied the economic crisis there as the inevitable outcome of the Burmese Rebellion. He has interviewed prominent party leaders, and collected genuine materials for publishing a a book. "The Burmese Rebellion" with leading photographs. I have agreed to add my foreword as I am sure the book will be of great service to the Indians in general, and to the banking Chettiar community in particular A true book, timely aided and timely published, saves the errors of many ages.

# SAYA SAN
## THE BURMESE REBEL LEADER.

PRICE RE. 1—0—0.

*For Copies Apply Sharp to:—*

V. G. NAIR.
JOURNALIST.
Kottaiyur,
RAMNAD DT.

காலத்துக்கேற்ற நூல்!

# பர்மாக் கலவரம்.

——(:o:)——

ஆசிரியர் வி. ஜீ. நாயர்.

*A History of "Burmese Rebellion"*

## விஷயங்கள்.

1. சென்ற மூன்று பர்மிய யுத்தங்கள்.
2. ஆங்கிலேயர் பர்மாநாட்டைக் கைப்பற்றிய முறை.
3. பர்மாவின் தற்கால அரசியல் நிலைமை.
4. பிரிவினை என்றால் என்ன?
5. கலகத்தின் காரணம்.
6. இந்தியர் நிலைமை.
7. நகரத்தாரின் தொழில் நிலைமை.
8. கட்சித்தலைவர்களின் அபிப்பிராயங்கள்.
9. பர்மாவின் வருங்கால வாழ்க்கை.

பர்மாக் கலவர சம்பந்தமான சுமார் 30 அழகிய ஆப் போன் படங்களுடனும் திரு. வி. ஆர். எம். செட்டியார் பி. ஏ. அவர்களின் முகவுரையுடனும் கூடிய சீக்கிரம் வெளிவரும்.

இதன் விலை ரூ. 1—8—0 முன் பணம் அனுப்பு வோர்க்கு தபாற் செலவு இனம்.

விலாசம்:—

வி. ஜீ. நாயர்,

ஜர்னலிஸ்ட்டு கோட்டையூர், (இராமநாதபுரம் ஜில்லா.)

Prined at
The Dhanavanikan Press,
Kottaiyur.

# சாயா சான்

## பர்மாக் கலகத் தலைவன்.

ஆசிரியர்

வி. ஜி. நாயர்

கோட்டையூர்.

*All Rights Reserved.*

1931

# ஆசிரியர் முன்னுரை.

பல நண்பர்களின் விருப்பத்திற் கிணங்க 'சாயா சான்' என்னும் இச் சிறு நூலை வெளியிடத் துணிந்தேன். பர்மாக் கலகத் தலைவனான சாயா சானைப் பற்றிய முக்கிய விஷயங்களைத் தமிழ்மக்கள் அறியவேண்டும் என்னும் ஆர்வமே இப்புத்தகத்தை வெளியிடும்படி என்னைத் தூண்டிற்று. இப்புத்தகத்தை தமிழ் மக்களும், தனவணிக மக்களும் ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு மிகுதியும் உண்டு. இப்புத்தகத்திற்கு அன்புடன் முகவுரை தந்த எனது நண்பரும் "தனவணிகன்" நிர்வாக ஆசிரியருமான திரு. கருப்பன் செட்டியார் அவர்கட்கு எனது நன்றி உரியதாகுக.

நான் எழுதியுள்ள "பர்மாக்கலவரம்" என்னும் பெரிய புத்தகம் அச்சிலிருக்கின்றது. கூடிய சீக்கிரம் வெளிவரும்.

வி. ஜி. நாயர்,
ஆசிரியர்.

VL38
N8

# முகவுரை.

எனது நண்பர் திரு வி. ஜி. நாயர் அவர்களால் எழுதப்பட்டிருக்கும் "சாயா சான்" என்னும் புத்தகத்தை தமிழுலகிற்கு அறிமுகப் படுத்திவைக்க மிகவும் சந்தோஷமுடையவனாக விருக்கின்றேன்.

பர்மா அரசாங்கத்தினருக்கு மிகுந்த திகிலையும், பொதுமக்களின் மனதில் அதிகமான கலவரத்தையும் உண்டாக்கிய, பர்மாக் கலகத்தின் தலைவனான "சாயா சான்" என்பவரைப்பற்றி தமிழில் வெளிவரும் முதலாவது புத்தகம் இதுவே யாதலால், இப்புத்தகத்தின் ஆசிரியருக்கு தமிழ்நாடு பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

இதன் ஆசிரியர், தனது சிரமத்தையும் பொருட்படுத்தாது, கலகம் நடந்த இடங்களை நேரிற் சென்று பார்த்தும், தனது சுற்றுப்பிரயாணத்தின்போது அநேக தலைவர்களை நேரிற் கண்டு, அவர்களுடைய அபிப்பிராயங்களைத் திரட்டியும், பிரபலமான ஆங்கில பத்திரிகை

களில் வெளியான முக்கியமான செய்திகளைத் தொகுத்தும் இப்புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.

நம் மக்களிடையே பர்மாக்கலவரத்தைப்பற்றி பல அபிப்பிராயங்கள் இருந்துவரும் இப்பொழுது, கலகத்தின் உண்மையான காரணங்களையும், கலகத்தலைவனைப் பற்றிய முக்கிய குறிப்புகளையும், இப்புத்தகம் நன்கு விளக்குவதால், தமிழ் மக்களனைவரும், சிறப்பாகத் தனவணிக மக்களும் இப்புத்தகத்தை ஆர்வத்துடன் வரவேற்பார்களென்று மனப்பூர்வமாய் நம்புகின்றேன்.

கோட்டையூர்<br>22–8–1931. அ. ராம. அ. கருப்பன்செட்டியார்.

# சாயா சான்

## பர்மாக் கலகத் தலைவன்.

### முன்னுரை.

---

இருபதாம் நூற்றுண்டில் இந்தியச் சரிதத்திலும், பர்மிய நாட்டின் சரிதத்திலும், மிகவும் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகளில் பர்மாக்கலவரமும் ஒன்று. 1930-ம் வருடம் டிசம்பர் மாதம் 22ம் தேதியன்று, தாராவாடி ஜில்லாவின் வட கிழக்கு மூலையிலுள்ள சில கிராமங்களில் இக் கலகம் ஆரம்பமாயிற்று. தாராவாடி ஜில்லாவை, பழைய பர்மிய சரித்திரங்களில் கலவரத்துக் கிருப்பிடமான "அபாய நாடு" என்று கூறப்பட்டிருக்கின்றது. அபாய நாட்டின் சிறு கிராமங்களில் உண்டான இச் சிறு கலகம், பர்மா நாடு முழுதும் பரவி அரசாங்கத்தினருக்கும், பொது மக்கட்கும் அதிகமான கலவரத்தை உண்டாக்கி, இன்று தினம் பர்மா நாட்டைப் பேராபத்தான நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டது.

## கலவரத்திற்குக் காரணங்கள்

கலவரம் உண்டானதற்குக் காரணங்கள் வறுமையின் கொடுமையும், வரிச் சுமையுமேயாகும். பர்மாவின் உயிர் நிலையான நெல்விலையின் இறக்கமும், உலகத்தையே பிடித்து வாட்டுகின்ற பொருளாதார நெருக்கடியும், ஒன்று சேரவே, பொது மக்களில் பெரும்பாலோர் தங்கள் நாணயத்தை இழக்கவேண்டிய நிலைமைக்கு வரவேண்டியவர்களானார்கள். புதிதாக விதிக்கப்பெற்ற, ஆள்வரி, தம்பதிவரி முதலியவைகள் பர்மியர்கட்கு அதிகமான ஆத்திரத்தை உண்டாக்கின. இரண்டு மூன்று வருடங்களாக தாராவாடி ஜில்லாவிலுள்ள கிராமாந்தரங்களில், சில தலைவர்களின் போதனைகளால், வரி கொடுக்கச் சக்தியற்ற சில ஏழைகள் வரி கொடுக்க மறுத்துப் பெருங்கிளர்ச்சி செய்தார்கள். அரசாங்க சிவில் அதிகாரிகள் இவ்வரிகளை ஒழுங்காக வசூல் செய்ய முடியாமல் இப்பொறுப்பை இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் தங்களுடைய பலத்தைக் கொண்டு ஏழை மக்களிடமிருந்து வரிகளை வசூல் செய்ய முயற்சித்தார்கள். இம்மாதிரியான முறைகளைக்கைக்கொண்டும் கூட, நிலவரி, தம்பதி

வரி முதலியனவைகளில் நான்கு கோடி ரூபாய் வரையி ருந்தும், பாதித்தொகை கூட வசூல் செய்ய முடிய வில்லை.

## அகில பர்மாச் சங்கம். (G. C. B. A.)

வடக்கே மிச்சினுவிலிருந்து தெற்கே மெற்குவே (முருகி) வரை, பர்மா வெங்கெனும் 5000 கிராமக் கிளைச் சங்கங்களைக் கொண்ட அகில பர்மா சங்கத்தார் (G. C. B. A.) தங்களுடைய உரிமைகளைப் பாது காத்துக் கொள்ளவும், பலப்படுத்திக் கொள்ளவும், ஒற் றுமையை உண்டாக்கவும் பிரசாரம் செய்தனர். இச் சங்கம், இந்திய தேசீய மகாசபையைப் போன்ற ஓர் ஸ்தாபனமாகும். இச்சங்கத்துடன் அகில பர்மாச் சாதுசங்கமும் இணைக்கப் பெற்றிருந்தது. அச்சங்கத் துக்கும் ஒவ்வொரு கிராமங்களிலும் கிளைச்சபைகள் ஏராளமாயிருந்தன. சாதுக்கள் சங்கத்தில் ஒரு லக்ஷத் திற்கு மேற்பட்ட பொங்கிகள் அங்கத்தினர்களாயி ருந்து பிரசாரம் செய்துவந்தார்கள். 1922ம் வருடத் தில் இவ் விரு சங்கங் கட்கும் தலைவராயிருந்தவர், பர்மா காந்தி யென்றழைக்கப்படும், 'மாண்புமிக்க

பொங்கி உத்தமர் அவர்களாவர். பர்மிய மக்கட்கு தேசிய உணர்ச்சியை ஊட்டி, பர்மிய நாட்டில் புத்துயிரை யளித்த பெருமை, இச் சங்கங்களையே சாரும்.

பர்மிய ஜனங்கள் அதிகமான கிளர்ச்சி செய்தவுடனே, அரசாங்கத்தினர் ஊ-சோ தின் என்பவரை தலைவராகக்கொண்ட 77 சங்கங்களைச் சட்ட விரோதமானதென்று கலைத்துவிட்டார்கள். சங்கங்களை அரசாங்கத்தினர் கலைத்துவிட்டபோதிலும் கூடப் பர்மிய மக்களின் உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சி அதிகமாக வளர்ந்துகொண்டே வந்தது.

## சாயா சான்.

பர்மாவின் மேற்பாகத்தில் (Upper Burma) லுள்ள ச்வேபோ (Shwebo) ஜில்லா பண்டைப் பெருமைகள் வாய்ந்ததாகும். பழைய பர்மிய அரசர்களின் சேனையில், இப்பகுதியிலுள்ளவர்களே, அதிகமாகச் சேர்ந்திருந்தார்கள். அன்றியும் இந்த ஜில்லாவில்தான் பெயர்பெற்ற கலகக் காரர்கள் தோன்றினார்கள். இத்துணைப் பெருமைகள் வாய்ந்த இந்த ஜில்லாவிலுள்ள ஓர் சிறிய கிராமத்தில் 1876-ம் வருடம் சாயா சான் தோன்

றினர். இவருக்கு சான்சா, சான்ஜோ, சயா மியாங் ஊ ஞாஜு என்ற மற்றப் பெயர்களும் இருந்தன. இவர் பிதா காமாமோவைச்சேர்ந்த மவுங்மின் வுன் என்பவராகும். சாயா சான் தன்னுடைய இளமைப் பருவத்தில், பர்மாவின் கீழ்புறப் பகுதிகளிலும், சயாம் முதலிய நாடுகளிலும், சுற்றித் திரிந்தார். பின்னர் அவர் பொங்கியாகவும் நாட்டு வைத்தியராகவும் ரேகை சாஸ்திரம் பார்ப்பவராகவும் விளங்கினர். பர்மிய பாஷையின் இலக்கியத்தில் இவருக்கு அளவுகடந்த ஆர்வமுண்டு. வைத்திய சம்பந்தமாகவும், மதசம்பந்தமாகவும் சில நூற்கள் வெளியிட்டுள்ளார். சீகயான் (Se Kyan) பெடின்கயான் (Bedin Kyan) எக்கிய கயான் (Ekkiya Kyan) முதலியவைகள் அவர் எழுதிய புத்தகங்களில் குறிப்பிடத் தக்கவைகளாகும். சாயா சான் சில காலம் ஓர் பர்மியப் பத்திரிகையின் ஆசிரியராயிருந்தார். பொங்கியாகவும், ஜோதிடராகவும், பர்மா நாட்டிலும் சயாம், ஷான் முதலிய சமஸ்தானங்களிலும் சுற்றியதால் பொதுமக்களின் உண்மையான வாழ்க்கையின் நிலமையை அறிந்துகொள்வதற்கு அவருக்குத் தகுந்த சந்தர்ப்பம்கிடைத்தது.

அரசாங்கத்தாரின் அனுமதியின்றி லாட்டரிச் சீட்டுகள் போட்டதற்காக இரண்டுமுறை இவர் சிறைக் கனுப்பப்பெற்ருர்.

இவ்வழக்கு நடைபெறுவதற்கு முன் இவர், தனக்குப் பழக்கமுள்ள ஓர் மனிதனல் தாக்கப் பெற்ருர். தாக்குண்டதால் ஏற்பட்ட காயமே அவருடைய நெற்றியில் இன்னும் வடுவாக இருக்கின்றது. சிறைத் தண்டனை முடிந்து வெளியே வந்ததும் தனது எதிரியைப் பழிதீர்த்தார். அதன் பயனக அவருடைய எதிரி உயர் துறந்தான். பின்னர் இக்கொலை சம்பந்தமான வழக்கு அவர்மீது தொடரப் பெற்றது. தகுந்த சாக்ஷியங்களில்லாத காரணத்தினல் அவர் விடுதலை செய்யப்பெற்ருர். அதுசமயம் அவருடைய பெயர் போ-சான் அல்லது சான்-மியா ஆகும். இப் பெயருடனேயே அவர் அழைக்கப் பட்டு வந்தார். மறுபடியும் அனுமதியின்றி லாட்டரிச் சீட்டுகள் போட்டதற்காக மீண்டும் அரசாங்கத்தினர் அவரைத் தண்டித்தார்கள்.

அதன் பின்னர் அரசியல் விஷயங்களில் ஈடுபட்டு பிரசங்கங்கள் செய்து பொதுமக்களைத் தட்டியெழுப்பினர்.


சாயா சானுடைய உயரம் ஐந்தடி, நான்கங்குலம். நெற்றியில் ஓர் வடுவுண்டு. இரு தொடைகளிலும் பச்சை குத்தப்பட்டிருக்கின்றது. எதனையும் பொருட் படுத்தாத வீரன், மிகவும் கம்பீரமான தோற்றமுடையவர். அவருக்கு வயது 55 ஆகும். அவர் அஹிம்சா தர்மத்தைப் பின்பற்றுபவரென்று பொது மக்கள் பேசிக்கொள்ளுகின்றார்கள். இதற்குத் தக்க உதாரணம் ஒன்றும் கூறப்படுகின்றது. சென்ற மகா யுத்தத்தின் பொழுது யுத்தபண்டிற்கு சாயா சானும் அவருடைய தந்தையாரும் பொருளுதவி செய்ய மறுத்தனர். அன்றியும், பொதுமக்களிடம் யுத்தநிதிக்கு பொருளுதவக் கூடாதென்ற பிரசாரமும் செய்தார். அவருடைய பிரசாரங்கள் ஆபத்துக் கிடமாகவிருந்ததினால், அரசாங்கத்தார் அப்பொழுதிருந்தே அவரைக் கண்காணிக்கத் தலைப்பட்டார்கள்.

பொங்கியாக விருந்தபடியாலும் அடிக்கடி பிரசங்கங்கள் செய்ததினாலும், உயர்ந்த பல புத்தகங்களை இயற்றியதனாலும் சாயா சானுக்கு பர்மாவின் பல பாகங்களிலும் ஏராளமான நண்பர்கள் ஏற்பட்டார்கள். அவர், குடியானவர்களிடமும், இதர பாமர மக்களிடமும்

தனக்கு ஓர் தெய்வசக்தியுண்டென்று கூறி, அவர்களை தம் வயப்படுத்தி அவர்கள் மத்தியில் மிகு செல்வாக்குடன் வாழ்ந்துவந்தார்.

## ஜி. ஸி. பி. ஏ. சம்பந்தம்.

1924ம் ஆண்டில் ஊச்சிலேயங் ஜி. ஸி. பி கிளை ஸ்தாபனமான அத்தின் சங்கத்தில் சாயா சா அங்கம் வகித்திருந்தார். ஆனால் அவர் சண்டை பே டுக்கொண்டு ஊசோத்தையின் ஜி ஸி. பி. ஏ. சேர்ந்தார். 1928ம் ஆண்டில் மீன்பூவில் நடைபெ இந்த ஜி. ஸி பி. ஏ. மகாநாட்டில் விஜயம் செய்தி தார். இவர் இரங்கூனிற்கு வரும்பொழுது மேற்படி ச மண்டபத்தில் வழக்கமாகத் தங்குவதுண்டு. 193( வருடம் நவம்பர் மாதத்திற்கு முன்பிருந்தே இவர் க கத்திற்காக அதி ஜாக்கிரதையுடன் ஏற்பாடுகள் செ துவந்திருக்கின்றார். அப்பொழுது பியாப்பம் ஜில்லா விலுள்ள டேரியாவிற்கு சென்றிருந்தார். இன்சீன் ஜில்லாவிலுள்ள தெய்ச்சியிலும் தாராவாடி ஜில்லாவி லுள்ள இனிவாவிலும் நவம்பர் மாதம் இவர் மகாநாடு கள் கூட்டிவைத்துள்ளார். நவம்பர் மாதம் இறுதியில் சாயா சான் மறுபடியும் டேரியா செல்லலாயினர்.



பர்மாக் கலவரத்தில் சம்பந்தப்பட்ட

ஓர் சிறிய தலைவன்.

கையில் பச்சை குத்தப்பட்டிருப்பதை படத்தில் காணல

யாப்பம் கலகத் தலைவனுன ஆங்லாவின் விட்டில் தாண்டாவில் இரவில் ஓர் அந்தரங்கக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கலகத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இன்சின் ஜில்லாவிலுள்ள சவேனுக்குவினில் டிசம்பர் மாதம் 12ம் தேதி இறுதியான மகாநாடொன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் சாயா சான் தனது திட்டங்களை விளக்கிக் காட்டினர். அலந்தாங்கில் தானோர் அரண்மனை கட்டியுள்ளதாகவும், தான் "காலோன் ராஜா"வென்ற பட்டம் வகித்துக் கொண்டதாகவும் கூறினர். இக்கூட்டத்தில் பச்சை குத்துவதற்கும் கவசங்கள் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இம்மகா நாட்டிற்கு யெயாப்பம், தாராவாடி, இன்சினிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

பர்மா அரசாங்கத்தாரால் ஊ சோத்தையின் ஜி. ஸி. பி. ஏ. சங்க காரியதரிசியான தாராவாடி மவுங் வுங் வீட்டில் சோதனை போடப்பட்டபொழுது கடிதமொன்று கைப்பற்றப் பட்டது. இக்கடிதம் தாராவாடி மவுங் மவுங்கிற்கு ஜி. ஸி. பி. ஏ. தலைவர் ஊ சோத்தையினுல் 1930ம் வருடம் நவம்பர் மாதம் 2ம்

தேதியிட்டு எழுதப்பட்டதாகும். இதில் சாயா சானின் சட்டவிரோதமான செயல்கள் கண்டு தாம் பெரும் பீதி கொள்வதாகவும் அந்த சட்டவிரோதமான செயல்களை நிறுத்தக் கடிதம் எழுத வேண்டுமென்றும் கண்டிருந்தது. அத்துடன் ஜி. ஸி. பி. எ. தலைமைப் பதவியை ஊ சோத்தையின் ராஜீநாமாச் செய்யவும் உத்தேசித்திருந்தாரெனத் தெரிந்தது. என்பினும் அவர் ராஜீநாமாச் செய்யவில்லை. சாய சான் முயற்சிகளைத் தடைசெய்ய மார்க்கந் தேடவுமில்லை. அதுசம்பந்தமாக அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்கவுமில்லை. இவரது சங்கக் கமிட்டி சாயா சான் செயல்களை முற்றும் தெளிவுற அங்கீகரிக்கவில்லையேயாயினும் பிரதம சங்கத்தின் தலைவரும் காரியதரிசியும் விஷயங்களை அறிந்தும் மௌனம் சாதித்து உடன்பட்டிருந்தனர். தாராவாடி இன்சின் ஜில்லாக்களில் சாயா சானின் செயல்கள் இன்னதென்னத் தெரிந்திருந்தும் பிரஸ்தாப ஜில்லாக்களில் தொண்டர்கள் சேகரிக்க ஊ சோத்தையின் ஜி. ஸி. பி. எ. சிபார்சு செய்திருக்கிறதெனத் தெரிய வந்தது.

இக்காரணங்களால் ஊ சோத்தையினைத் தலைவராகக்கொண்ட ஜி. ஸி. பி. எ. சங்கங்களை அரசாங்க

தினர் கலைத்துவிட்ட பின்னர் சாயா சான் தாராவாடி ஜில்லாவில் குடியேறி வாழ்ந்து வந்தார். தன்னுடைய எண்ணத்தின்படி வேலைகள் செய்வதற்கு தாராவாடி ஜில்லாவே தகுதியான இடமென்று அவர் தீர்மானித்தார். பின்னர், தாராவாடி ஜில்லாவிலுள்ள பாமர மக்களிடம் சென்று, அரசாங்கத்தினருக்கு வரி கொடுப்பது அநியாயமென்றும், அரசாங்கத்தை எதிர்த்துப் போராடவேண்டுமென்றும், பிரசாரம் செய்தார். தன்னிடம் சில மருந்துகள் இருப்பதாகவும், அவைகளைச் சாப்பிட்டால் எளிதில் வெடி குண்டுகள் உடம்பில் பாயாதென்றும் மற்றும் பச்சை குத்திக் கொண்டால் சண்டைகளிற் காயம் படாமல் தப்பித்துக் கொள்ளலாம் என்றும் அவர் கூறியதால், பாமர ஜனங்கள் அவரைப் பூரணமாய் நம்பி அவரியக்கத்திற்கு ஆதரவளித்தார்கள்.

சாயா சான் தாராவாடி, இன்சீன், பியாப்பம் முதலிய ஜில்லாக்களில் "கலோன் அத்தின்" என்கிற சங்கங்களை ஸ்தாபித்து அவைகளின் தலைவராக இருந்துவந்தார். அவர் தன்னை "தூப்பறைக்கா கலோன் ராஜா மீங்கி" என்றழைத்துக் கொண்டு அரசாங்கத்தினருடன் போருக்கு வரத் தயாராக விருப்பதாக ஓர் அறிக்கை வெளியிட்டார்.

அவர் தனது சங்கத்தில் சேருகின்றவர்களிடம் கீழ்க்கண்டவாறு சத்தியப் பிரமாணம் வாங்கிக் கொண்டார்.

"மதிப்பும் கண்ணியமுமுள்ள பிறவியினருக்கு அவர்தம் விருப்பிற்கிணங்க பரிசுத்த ஆவிகள் துணை புரியுமாகுக. அந்த உயர்குடிப் பிறந்தார் நாங்கள் கூறும் சத்தியப் பிரமாணங்களுக்கு கவனமுடன் செவி சாய்ப்பார்களாக. பகவான் புத்தன் மதம் ஓங்குவதற்கே இவ்விதம் நாங்கள் சத்தியஞ் செய்து உறுதி செய்துகொள்கிறோம். தெய்வங்காள்! அஞ்ஞானிகளைத் தொலைத்துவிடுங்கள்! அதனால் நமது கீர்த்தி வாய்ந்த பௌத்தமதம் செழிப்புறட்டும்; அந் நோக்குடனேயே நாங்கள் சத்தியஞ் செய்து கொள்வதால் பரிசுத்த தெய்வங்களே! எங்கள் பிரமாணத்திற்கு சாட்சியாவீர்களாக. கேளுங்கள்; பிரம்மாக்களே! தெய்வங்களே! பிரம்மாக்களின் அரசே! பௌத்த மத பாதுகாப்பாளரே! பிரிட்டிஷ் நுகத்தடியிலிருந்து பர்மா விடுதலை படையும்வரை ஜி. ஸி. பி. ஏ. சபைக்கும் கலோவன் படைக்கும் இணைக்கப்பெற்றுள்ள சங்கங்களின் அங்கத்தினர்களுடைய உயிரையோ அல்லது பொரு

ளை யோ நாங்கள் அழிக்கப்போகிறதில்லை. அல்லது அவர்களை எவ்விதத்திலும் ஹிம்சிக்கப் போகிற தில்லையென நாங்கள் சத்தியஞ் செய்துகொள்கிறோம், நாங்கள் மட்டும் அவ்விதஞ் செய்யாதிருப்பது மட்டுமல்ல, இதரர் அவ்விதச் செயல்கள் புரியாதிருக்கவும் பார்த்துக்கொள்வோம். நாங்கள் எங்கள் பெரியோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்போம்.

எங்களுக்குக் கீழுள்ளவர்களை அவமரியாதையாக நடத்தமாட்டோம். ஆனல் பெரியோர்களின் உத்திரவுகளுக்குக் கீழ்ப்படிந்து இங்கு குறிப்பிடப் பெற்றுள்ள சட்டதிட்டங்களுக்குக் கூடுமானவரை வழுவாது கட்டுப்பட்டு நடப்போம். பௌத்த மதத்திற்காக எங்களுடைய உயிரைக் கொடுத்தேனும் அஞ்ஞானிகளை நாங்கள் கருவறுத்துவிடுவோம். இவ்வுறுதி மொழிகளுக்கு நாங்கள் உண்மையுடன் நடந்துகொள்ளின் எங்களுக்கு அனுதினமும் அதிக வல்லமையுண்டாகுமாக; நமது ஆபத்துகளை விரைவினில் போக்க அதிகமான ஆயுதங்களும் போர்த் தளவாடங்களும் துணையாளர்களும் கிடைக்கப் பெறுவோமாக! அஞ்ஞானிகளை விரைவினில் வீழ்த்துவோமாக! நம்முடைய எதிரிகளா

ன அஞ்ஞானிகளும் அவர்களுடைய வேலைக்காரர்களும் உபயோகிக்கும் ஆயுதங்களும் தோட்டாக்களும் பயன ளியாது தண்ணீராகவோ காற்ருகவோ மாறுமாக அல் லது குறி தப்புமாக; என்றும் அவர்தம் நோக்கம் நிறைவேருதிருக்குமாக! சகல அபாயங்களிலிருந்தும் நாம் தப்பித்து விடுதலைபெறுவோமாக, அஞ்ஞானிகள் நிர்வகிக்கும் கோர்ட்டுகளில் நாம் பொய்கூறின் அத ஞல் பாதிக்கப்படாமலிருப்போமாக. எங்களுக்கு நீண்ட ஆயுள் கிடைக்குமாக. இறுதியில் இறந்தபின் நிர்வாண மோட்ச மடைவோமாக. எங்கள் உறுதி மொழிக்கு நாங்கள் விரோதமாக நடந்து கொள்ளின் எங்களுக்குச் சகலவித இன்னல்களும் ஏற்படுமாக! உலகம் முடிவுறும்வரை நரகத்தில் அழுந்துவோ மாக! இந்த உறுதிமொழிகளுக்கு பரிசுத்த ஆவிகள் சாட்சியங்களாக விளங்க கேட்டுக் கொள்ளுகிரும். இந்த அஞ்ஞான காட்டு மிராண்டித்தனமாக நடப்ப வர்களை தூக்கியெறிந்து விடுவதற்கும்—குடை கவிழ்த்தி விடுவதற்கும் கலோவின் படைக்கு அதிக ஆட்கள் சேருவதற்கும் பரிசுத்த தெய்வங்கள் எங்களுக்குத் துணைபுரியுமாக. நம்முடைய எதிரிகளான அஞ்ஞானிக ளைத்தவிர எந்தவோர் மிருகத்தினுடைய உயிரையும்

நாங்கள் வதைக்கப் போகிறதில்லை. நாங்கள் விபசாரஞ் செய்யப் போகிறதில்லை. இதரர்க்குப் பாதகமாக நாங்கள் பொய் சொல்லப் போகிறதில்லை. நாங்கள் மாட்டுக்கறி பன்றிக்கறி முட்டைகள் சாப்பிடப்போகிறது மில்லை. துப்பாக்கிகளோ அல்லது இதர ஆயுதங்களோ உபயோகித்துக் கொண்டிருக்கும்பொழுது ஒருவர் சுருட்டிலிருந்து மற்றொருவர் நெருப்புப் பற்றவைத்துக் கொள்வதில்லை.''

சாயாசான் நீண்ட காலமாக பொங்கியாக விருந்ததாலும், பிரபல ஆசிரியராக விருந்ததாலும், பொங்கிகளுக்கிடையே அவர் அதிக மதிப்பு வாய்ந்தவராகக் கருதப்பட்டார். அன்றியும் அவர் அப்பொங்கிகளிடம் மந்திரங்களினால் அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடலாமென்றும் பிரசாரம் செய்து அவர்களை நம்பும்படி செய்தார். இதன் பயனாக பெரும்பாலான பொங்கிகள் "கலோன் அத்தினில்'' சேர்ந்து பிரசாரம் செய்தார்கள். பொதுவாக பர்மிய நாட்டில் பொங்கிகட்கு அதிகமான மதிப்பிருப்பதனால், பாமர மக்கள் அவர்களுடைய வார்த்தைகளை நம்பி கிளர்ச்சியில் பங்கெடுத்துக்

கொள்ள முன் வந்தார்கள். அப்பொழுதிருந்த பொருளாதார நெருக்கடியும், நெல் விலையின் வீழ்ச்சியும், கலவரத்திற்கு மிக உதவியாக விருந்தன.

தாராவாடி ஜில்லாவில் கலவரம் ஆரம்பமானதும் பர்மிய போலீஸ் உத்தியோகஸ்தர்கட்கு சாயா சான் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். தாராவாடி ஜில்லாவிலுள்ள ஓர் கலகத் தலைவனின் வாசஸ்தலத்தை பிரிட்டிஷ் ராணுவப் படையார் முற்றுகையிட்டு அங்குள்ள சாமான்களைக் கைப்பற்றியபொழுது அவ்வறிக்கையின் மூலப் பிரதி கிடைத்தது.

அறிக்கையின் சுருக்கம்.

"பர்மிய நாட்டு மக்களுடைய அரசியல் பொருளாதார முன்னேற்றத்திற்காக நாங்கள் அரசாங்கத்தினரோடு போர் புரிகின்றோம். ஆகையால் நீங்கள் எங்களை விரோதிகளாகப் பாவிக்கக் கூடாது. உங்களால் இயன்றளவு உதவிசெய்ய வேண்டுகின்றோம். எங்கள் வார்த்தைகளை மீறி நீங்கள் எங்கட்கு இடையூறு புரிவீர்களானல் எங்களிற் பலர், ஆத்திரங்கொண்டு உங்கட்குக் கேடுசெய்யலாம். அதற்கு நாங்கள் ஜவாப்தாரி

களாகமாட்டோம் என்று உங்கட்கு இப்பொழுதே முன்னெச்சரிக்கை செய்கின்றோம்."

இம்மாதிரியான பிரதிகள் ஏராளமாக சைக்களோ ஸ்டெயில் செய்யப்பட்டு உத்தியோகஸ்தர்கட்கு அனுப்பப்பட்டிருந்தன.

சாயா சான் கூட்டத்தார் அரசாங்கக் காட்டிலாகாக் கட்டிடங்களையும், காவற்கூடங்களையும் நெருப்புக்கிரையாக்கியதுமன்றி, அங்கிருந்த அநேகம் துப்பாக்கிகளையும் கைப்பற்றினர். பல ஜில்லாக்களிலுள்ள கிராம முன்சீப்களிடம் அவர்கள் தங்களுக்கு எத்தகைய இடையூறும் செய்யக்கூடாதென வாக்குறுதி வாங்கினர்கள். வாக்குறுதி தர இசையாதவர்களையும் வாக்குறுதியை மீறியவர்களையும் கொலை செய்தனர். தன்னுடைய கலோவ்ன் படையினிரிடம் சாயா சான் கட்டுப்பாட்டுடன் கண்டிப்பாக நடந்து கொண்டார். இராணுவப் படையார் ஒரு கலகத் தலைவனுடைய வாசஸ்தலத்தைக் கைப்பற்றியபொழுது 'கலோவ்ன் அரசன்' என்று கையொப்பமிட்ட ஓர் விளம்பரம் கிடைத்தது. அது சாயா சான் தனது கூட்டத்தாரோடு நடந்துகொண்ட முறையை விளக்கிக் காட்டுவதால் அதைக் கீழே தருகின்றோம்:—

"அனுமதி பெருமல் யாரும் வாசஸ்தலத்திலி ருந்து (Camp) கண்டிப்பாக வெளியே போகக்கூடாது. விடுமுறை பெற விரும்புகின்றவர், தலைவரைக் கண்டு தான் பெறவேண்டுமென்ற நிர்ப்பந்தம் இல்லை. மூன்று சங்க உறுப்பினர்களைக் கண்டு அனுமதி பெற்ருல் போதும்."

சாயா சான் இரங்கூன் நகரைத் தாக்கிக் கொள் ளையிடுவதற்காக பலமான முயற்சி செய்தார். ஆனல் இரங்கூன் போலீசாருடைய திறமையினல், அவனு டைய திட்டங்கள் நிறைவேருமற்போயின. ஆறு மாதகாலம் இடையருது முயன்றும் ராணுவத்தினரால் சாயா சான் பிடிபடாமற் போகவே, அரசாங்கத்தினர் அவரைப் பிடித்துக் கொடுப்பவர்கட்கு 10000 ரூபாய் பரிசளிப்பதாகத் தெரிவித்ததோடு, அவருடைய புகைப் படத்தை பர்மாவில் பல முக்கியமான ஊர்களில் பொது இடங்களில் தொங்கவிட்டிருந்தார்கள். ஆனல் இம் முயற்சிகளெல்லாம் பயனற்றுப் போயின. பொதுமக் கள் சாயா சான் சண்டையில் இறந்துபோனதாகவும், யோமாஸ் என்னும் மலைக் குகைகளில் மாயமாக மறைந் துவாழ்வதாகவும், சாயாம் தேசத்திற்கு ஓடிவிட்டதா

கவும் பற்பலவாறு கூறினர். நிலைமை யிவ்வாறுக, ராணுவப்படையினரால் கலகங்களும் கொள்ளைகளும் ஒருவாறு குறைந்துகொண்டே வரும்பொழுது, அமைதியாகவிருந்த ஷான் தேசங்களில் கலவரம் ஆரம்பமாயிற்று.

## ஷான் தேசத்தில் சாயா சான்.

நவுஞ்சிக்கியோவிற்கு தெற்கே ஐந்தாவது மைலிலுள்ள மச்சினு என்ற கிராமத்தில் ஊ ஞாணு வென்ற பொங்கியும் மவுங் டின் என்ற அவருடைய சீடனும் தோன்றினர். இவர்கள் சாயா சானும் அவருடைய சீடனும் ஆவர். இவர்கள் தூடா செளக் என்ற மலைக் குகைக்குச் சென்றனர். பச்சை குத்துவதற்காக திருத்திகள் ஊதி ஊசிகள் தயாரித்தனர்.

ஒரு பொங்கியும் ஒரு குடியானவனும் வந்திருக்கும் செய்தி பலருக்கும் பரவியது. பல கிராமத்தினர் குகையை நாடினர்; உணவு காணிக்கைகள் முதலியன வழங்கினர். திஞ்சான் வைபவத்திற்குமுன் அதாவது, ஏப்ரல் மாதத்தில் சில கிராமத்தினருக்கு ஊசிகொண்டு பச்சை குத்தப்பட்டது.

ஊ ஞாஞு என்ற பொங்கி கிராமத்தினருக்கு ...
சை குத்தி புஜங்களில் ஊசி ஏற்றிவரும் செய்தி சம...
தானுதிபதி சாப்வாவிற்கு எட்டியது. உடனே அவ...
தமது சமஸ்தான போலீசாரை ஏவி அப்பொங்கியைப்
பிடித்துக் கொண்டுவர உத்தரவிடலாயினுர். ஆனுல்
முன்னேக்குடைய ஊ ஞாஞுவும் அவருடைய சீடனும்
விரைவினில் வழிநடந்தனர். யோக சாகாவிலுள்ள
பின்பாவிற்கருகிலுள்ள குன்றை நாடினர். மே மாதம்
ஆங்சந்தாவென்ற ஜெயநகரம் அங்கு அமைக்கப் பெ...
றது.

பிரஸ்தாப நகரம் அமைக்கப்பெற்ற செய்தி
உறுதிபெற்றதும், நவுங்கிக்கோ மியோசாவான ஊபத...
தௌங்கும் சமஸ்தான போலீஸ் அதிகாரிகளும் விஷ...
யத்தை ஷீப்பா அதிபதிக்கு அறிவிக்கவே அவ...
லோக்கல் கவர்ன்மெண்டுக்கு தாமதமின்றி தகவல்
விடுத்தார். பர்மா சர்க்கார் சுமார் 100 பிரிட்டிஷ்
சோல்ஜர்களை அனுப்பிவைத்தனர். இவர்களில் 5...
பேர் நவுங்கியோவிற்கும் இதர 50 பேர் நவுஞ்சாகி...
கும் சென்றனர்.

ஊ ஞாஞு வென்ற சாயா சான் தன்னைப் பின்பற்ற
நிற்கும் ஏராளமானவர்களை இரு பட்டாளங்களாக

மைக்கலாயினார். இவர்களில் ஒரு பட்டாளத்தை
ழக்கிலும், மற்றோர் பட்டாளத்தை மேற்கிலும்
அனுப்பிவைக்கலாயினார். ஜயநகரத்தை தமது பிரதம
ாசஸ்தலமாகக் கொள்ளலாயினார்.

ஊ ஞானவின் படைகளுக்கும் சர்க்கார் படைக
ளுக்கும் ஜூலைமீ 2ம்வ போர் நடக்கலாயிற்று. அப்
போரைப்பற்றி சமஸ்தான துவிபாஷியொருவர் கூறு
வது வருமாறு:—

சர்க்காரின் லாஷியோ படையுடன் ஊத்தாடா
ன்பவர் துவிபாஷியாக நவுங் பெங் சென்றார். நமது
சளங்கிலுள்ள துருப்புக்கள் கொண்ட படகுகள் தங்
ள் பக்கம் திரும்பாததால் காப்டன் போர்பஸ் ஒரு கம்
பனியை தாமும் ஆற்றிற்கு இரண்டு பர்லாங் தூரத்
ில் ஓரிடத்தில் அமைத்துவிட்டு மற்றோர் கம்பெனி
டன் ஆறறை நோக்கிச் சென்றார். அவருடன் ஊ
யக், பி. எ. வும் சென்றார். இவர் மியோவூன்
வார். மீங்கே ஆற்றின் அக்கரையில் பலர் கூடிநிற்
த சர்க்கார் படையினர் கண்டனர். அவர்களில்
பர்மியன் சிகப்பு நிற லொங்கியுடன் விளங்கினான்.
ரர் ஷான் தேசவழக்கப்படி கால்சட்டைகள் அணிந்
ருந்தனர். அவர்கள் யாரென ஊத்துடா உசாவினார்.
தற்கு அக்கரையிலுள்ள அன்னார் தாங்கள் கலோ
ன் படையினரென பதிலளித்ததுடன் தாம் தமின்றி

துப்பாக்கிப்பிரயோகஞ் செய்யலாயினர். அதன் பின் சர்க்கார் படையும் வெடி தீர்த்தது. கலகக்காரர்களில் பலர் சேதமாயினர். என்பினும் காலை 8 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை கடும்போர் நிகழ்ந்தது. கலகப் படையின் துப்பாக்கிப் பிரயோகம் ஒய்ந்து விடவே சர்க்கார் படையினர் தெப்பத்தின் மூலம் ஆற்றைக் கடந்து அக்கரை சேர்ந்தனர். அங்குபல கலகக்காரர் மாண்டுகிடந்தனர். இதர கலகக்காரர் அடவில் ஓடிவிட்டனர். மாண்டுகிடந்தவர்களில் மூவர் அடுத்தாட்களாவர். அவர்கள் அணிந்திருந்த கச்சையின் சின்னத்தின்மூலம் அவர்கள் கலகப்படையின் காப்டன்களென அறியலாயிற்று.

## தப்பியோடிய விதம்.

பிறகு ஊ நியாணு தமது அடுத்தாள் மவுங் டினுடனும் 13 ஷான் கலகக்காரர்களுடனும் இரண்டு மூன்று வழிகாட்டிகளுடனும் ஷான் தேச சமஸ்தான அதிகாரிகளுக்கு அகப்படாது தப்பி பண்டிக்கரிகினுள்ள சவுங்மாஜி சௌங்கிற்கு சென்றுவிட்டார், இவர்கள் அங்காங்குள்ள கிராமங்களை நெருங்காது தெற்கு நோக்கி மெதுவாக பிரயாணஞ் செய்யலாயினர். இவர்கள் சீடாவிற்கும் லாமேய்ங்கிற்குமிடையே சென்றுகொண்டிருந்தபொழுது ஒரு அடுப்புக் கரிக்காரன் இவர்களைக் காணலாயினன். இச் செய்தியை லாமேய்ங் கிராமாதி

காரி மடையா போலீஸ் ஸ்டேஷனுக்கு தெரிவிக்கலாயி னர். அங்கிருந்து ஜில்லா போலீஸ் சூப்பிரன்டெண் டிற்கு தகவலெட்டியது. ஆயுதமணிந்த 25 சிவில் போலீசார் அனுப்பிவைக்கப் பெற்றனர். ஆனல் சுற் றித் தேடிப் பார்த்ததில் எவரும் அகப்படவில்லை.

அதன் பின் இராணுவ அதிகாரிகளுடன் கலந் தாலோசித்து லாமேய்ங்கிலிருந்து தெற்கிலும் சௌக் மியிலிருந்து கிழக்கிலுமாக பல காவல்கள் வைக்கப் பெற்றன. கலகக்காரர்கள் தெற்கிலிருந்து பிதுங்கிவி டாதபடி தடுப்பதற்குவேண்டிய பந்தோபஸ்துகள் எடுத்துக் கொள்ளப் பெற்றன. கலகக்காரர் மாந்த லேயில் நுழையலாமென தகவல் தெரியவந்ததால் மாந் தலேய்க்கு வரும் சகல பாட்டைகளிலும் தக்க காவல் கள் வைக்கப்பட்டன; சகல வண்டிகளும் நன்கு சோ திக்கப் பெற்றன. ஜூலை 29உ புதன் கிழமை மாலையில் லாமேய்ங் வீதியில் ஒரு மோட்டார் பஸ் வண்டியை போலீசார் நிறுத்தி சோதனை போட்டனர். அதிலிருந்த பிரயாணிகளுடன் இரு ஷான் காரர்களும் அவர்களுடன் ஒரு பர்மியனும் சேர்ந்திருந்தனர். கேள்விகளுக்கு அந்த மூவரும் சரியான பதில் அளிக் காததால் தடைசெய்யப் பெற்றனர். அடுத்த நாள் காலையில் விசாரணை நடந்தது. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பெற்ற அந்த மூவரும் தாங்கள்

கலகக்காரர்களை ஒத்துக் கொண்டதுடன் தங்களுடனிருக்கும் பர்மியன் தங்கள் கலகத் தலைவருடைய அடுத்தவான மவுங் டின் என்றும் கூறினர். மௌங் டின் என்பவர் "நாங்கள் சாயா சானின் குடிசையிலிருந்து வந்தோமென்றும் சாயா சான் கொடுத்தனுப்பிய கடிதத்தை சீபனி பொங்கி மடத்தில் சேர்பிக்கவே வந்திருக்கிறோமென்றும் சொன்னார்" இவர்கள் கலகப் பாசறைக்கு வழி காட்டுவதாக இணங்கினர். காப்டன் ஸ்மால்மன் தலைமையில் 50 மிலிட்டரி போலீசாரும் ஜில்லா போலீஸ் சூப்பிரின்டெண்ட் மிஸ்டர் பிரஸ்காட்டும் கேப்டன் நோலனும் ஆயுதபாணிகளாக மோட்டார்களில் பிரயாணமாகினர். அதிலிருந்து வடகிழக்கிலுள்ள குன்றுக்ள் வழியாக சுமார் 14 மைல் நடந்து சென்றனர். கலகப் பாசரை இரவு 8 மணிக்கு காணப்பட்டது. பாசரையைச் சூழ்ந்துகொள்வது கஷ்டசாத்தியமானதாகத் தெரிந்தமையால் காப்டன் ஸ்மால்மன் எதிர் நின்று தாக்கலாயினார். வெடிகள் தீர்க்கப்பட்டன. கலகப் பாசரையிலிருந்தும் வெடிகள் தீர்க்கப்பட்டன. ஆனால் எவற்கும் சேதமேற்படவில்லை. கலகக்காரர் ஒட்டம்பிடித்து விட்டனர். அதன்பின் பாசரையை தேடியதில் இரு துப்பாக்கிகளும் உணவுச் சாமான்களும், சமையல்ப் பாத்திரங்களும், படுக்கைகளும், தலைவனின் டைரியும் இதரவைகளும் அகப்பட்டன. தப்பி ஒடிய கலகக்காரர் இதுசமயம் நிராயுத

பாணிகளாகி விட்டமையால் எங்கு ஷான் தேசம் திரும்பிவிடுகின்றனரோவென ஷான் தேச அதிகாரிகளுக்கு எச்சரிக்கை செய்யபபட்டது. அதேபோல் மாந்தலே ஜில்லா அதிகாரிகள் கலகக்காரர்களைக் கண்டு பிடிப்பதற்கு இரட்டிப்பு பந்தோபஸ்துகள் எடுத்துக்கொள்ளலாயினர். கலகக்காரர் ஷான் தேசத்திற்கே திரும்பி தப்பியோடி விடுவரென உத்தேசிக்கப் பெற்றது சரியானதாகிவிட்டது.

## கைது செய்யப்பட்ட விதம்.

முறியடிக்கப்பட்ட சாயா சானும், கூட்டத்தாரும் ஹோக்கோ கிராமத்திற்கு தென் கிழக்கிலுள்ளதோர் தோட்டத்தில் பதுங்கலாயினர். அங்கு ஹோக்கோ கிராமத்தைச் சேர்ந்த மவுங்கா வென்றமோர் கிராம வாசியை கலகத் தலைவன் அரிசியும் ஆஹாரமும் வாங்கிவர அனுப்பிவைக்கலாயினர். அந்த கிராமவாசி கலகத் தலைவனுக்கு வழிகாட்டியாக அமையலாயினன். அதனாலேயே அவனை நம்பி உணவுப் பொருட்கள் வாங்கிவர அனுப்பிவைக்கப் பறலாயினர். அந்த மவுங்கா என்போன் தமது கிராமத்திற்குச் செல்லவும் அக்கிராமாதிகாரி ஊ கியேன் என்பான் அவனை அழைத்து கலகக் காரர்களுடன் பின்தொடரலாகாதென்றும், ஆனல் அவர்களைப் பிடித்துக் கொடுக்க முயற்சிக்க வேண்டுமென்றும் அல்லாவிடில் சமஸ்தானதிபதி முழு

கிராமத்திற்கும் அபராதம் விதித்து விடுவாரென்றும் எச்சரிக்கை செய்யலாயினர். அதுகேட்ட மவுங்கா சரியென சம்மதித்து சாயா சானையும், அவருடைய ஆட்களையும் பிடித்துக் கொடுத்துவிடுவதாக வாக்களிக்கலாயினன். ஹோக்கோ கிராமாதிகாரி ஆகஸ்ட்மீ 2ம்வ பிற்பகல் 3 மணிக்கு அடுத்துள்ளதோர் போலீஸ் விடுதிக்குச் சென்றார்; அங்கு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கோஹானையும் அவருடைய படையையுங் கண்டு விஷயமறியிக்கலாயினர். அவ்விஷயம் நவுங்கியோ அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டது. அதிகாலையில் சாயா சான் படையைத் தாக்குவதென முடிவுசெய்யப்பட்டது. அரிசி வாங்கச் சென்ற மவுங்கா வேவுகாரனாக மாறிவிட்டமையால அவன் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது. படைகள் அணி வகுக்கப்பெற்றன. படைகளுக்கு ஹோக்கோ கிராமத்தினரும் உதவிபுரியலாயினர்.

சாயா சான் பதுங்கியுள்ள இடத்திற்கு மவுங்கா முதலாவதாகச் சென்று விட்டான் முன்னேற்பாடின்படி அங்கிருந்த இரு துப்பாக்கிகளையும் கைப்பற்றிக்கொண்டு எச்சரிக்கை செய்யலாயினன். அதன் பின் அதிகாரிகளும் கிராமத்தினரும் சூழ்ந்துகொண்டனர். அதுகண்ட சாயா சானும் அவருடைய ஐந்து ஆட்களும் அங்குமிங்கும் ஓட்டம் பிடிக்கலாயினர்.

சாயா சான் ஒரு புதரில் பதுங்கி தரையில் படுத்துக் கொண்டார். அவருடைய ஆட்கள் பின்னால் கிராமத்தினரால் கைதுசெய்யப்பெற்றனர். கலகத்தலைவன் தரையில் குப்புறப் படுத்துக் கொண்டமையால் சப் இன்ஸ்பெக்டர் கோஹானும் பதினைந்து கிராமவாசிகளும் ஒரு கணக்கணம் ஹோக்கோ கிராமாதிகாரியும் புதரைச் சூழ்ந்து படுத்திருப்பர்மீது பாய்ந்து அமுக்கிக் கொண்டனர். எவ்வித கஷ்டமுமின்றிக் கோஹான் கலக அரசனுக்கு கைவிலங்கிடலாயினர்.

பிடிபெட்ட தலைவன் ஊ நியானு வென சந்தேகமற முடிவு செய்யப்பட்டது. இந்த ஊ நியானு தாராவாடி கலகத்தலைவனை சாயா சானே ஒத்திருக்கிறுரென்பதற்கு தக்க அறிகுறிகள் காணக்கிடைத்தன. அவருக்கு முன்பு அறிமுகமான ஒரு உத்தியோகஸ்தரால் அவர் நன்கு அடையாளங்கண்டு பிடிக்கப்பட்டார். சாயா சான் பல மேடைகளில் பிரசங்கங்கள் செய்தபொழுது நேரில் அறிந்த உத்தியோகஸ்தரே இப்பொழுது அடையாளங் காணலாயினர், ஆனல் தானே சாயா சான் என ஊ நியானு ஒத்துக் கொண்டார். அவர் வாக்குமூலவும் கொடுக்கலாயினர், அது சாயாசானின் புழைய சரித்திரத்தை ஒத்திருந்தது.

## வாக்குமூலம்.

ஷான் தேசத்தில் நான் ஊங்கியாணு; பர்மாவில் சாயாசான் ஆவேன். தூப்பணுக்கா கலோவ்ன் ராஜஒ வென்பது தாராவாடியில் ஒரு கலோவ்ன் ஸ்தாபனமாகும். அந்த ஸ்தாபனத்தின் நோக்கங்களும் இலட்சியங்களும் (1) தேசம் (2) மதம் (3) அரசியல் (4) கல்வி முதலியவைகளை அபிவிருத்தி செய்வதாகும். மகாத்மா காந்தி இந்தியாவில் உப்புச்சட்டங்களை மறுத்ததைப் போல், எங்கள் ஏழை கிராமத்தினர் வரிகளின்றி தேக்கும் மூங்கிலும் வெட்டிக்கொள்வதற்கு சாதகமேற்பட காட்டிலாக்கா சட்டங்களை மறுக்க எங்கள் கலோவ்ன் ஸ்தாபனம் முன்வரலாயிற்று.

இந்த கலோவ்ன் சங்கம் இருபிரிவாகும். ஒன்று (அ) கலோவ்ன்; மற்றொன்று (ஆ) கலோவ்ன். கலோவ்ன் (அ) அங்கத்தினர்கள் வனச்சட்டங்களை மறுக்க வேண்டும்; சர்க்கார் ரிசர்வ்களில் சென்று தேக்குமரங்களையும் மூங்கில் மரங்களையும் வெட்டவேண்டும்; அவ்விதம் செல்லும் பத்துப்பேர்கொண்ட முதல் கூட்டம்—படை சர்க்காரால் கைதுசெய்யப்பெறின் அடுத்தே இரட்டிப்பானோர் சென்று சட்டமறுப்பு செய்து மரங்களை வெட்டவேண்டும்; இவ்விதமாக சகல (அ) அங்கத்தினர்களும் கைதுசெய்யப்பெற்றுவிட்டால் அல்லது

ஷைறையிடப்பெற்றுவிட்டால், (ஆ) அங்கத்தினர்கள் ஷைறைசென்றுள்ள (அ) அங்கத்தினர்களின் குடும்பங் களை ஆதரித்துப் போஷிப்பளிக்கவேண்டும்.

இந் நோக்குடனேயே கலோவின் இயக்கம் ஆரம் க்கப்பெற்றதாகும். ஆனால் வாலிப அங்கத்தினர்கள் கட்டுப்போய் விட்டனர் முறை தவறிவிட்டனர்; ஙுங்கு மங்கும் தாக்க முற்பட்டுவிட்டனர். அவர்களை நான் அடக்க முடியாமையால் அவர்களை விட்டுவிட்டு நான் மாந்தலேயிற்கும் அமராபுரத்திற்கும் சென்று விட்டேன். அங்கு ஒரு பையா கோவிலில் சிலகாலம் தங்கியிருந்தேன்.

வைத்தியத்தில் எனக்கு அதிகப் பிரியமாகையால் பொங்கி யுடைதரித்து ஷான்தேசம் சென்றேன். அங்கு என்னை ஊ நியாறுவென அழைத்துக்கொண் டேன். சமஸ்தானத்திலுள்ள ஒரு கிராமத்திற்குப் சென்று பொங்கி மடத்தில் வைத்தியத்தொழில் புரிய லாயினேன். எனக்கு நேயர்களும் சீடர்களும் ஏற்பட் டனர். பின் படேய்ங்கிற்கருகே ஒரு குன்றில் ஆங் சாந்தா வென்றதோர் நகர மமைத்தேன். அதற்குப் பர்மிய பாஷையில் ஜயநகரமாகும். நான் சிம்மாசன மேறியதாகக் கூறப்படுவது அபத்தமாகும். நான் செய் தது யாதெனில் எனது மருந்திற்கும் ரண சிகிச்சை ஊசிகளுக்கும் விழாக் கொண்டாடினேன்.

சமஸ்தான சிப்பாய்கள் எங்களைத் தாக்கியதால் ஜயநகரத்திலிருந்து நாங்கள் ஓடலாயினோம்; மாந்தலே ஜில்லாவிலுள்ள லாமேயங் மலைக்குச் சென்றோம். அ ரில் நாங்கள் பதுங்கியிருந்த சமயம் மாந்தலே பகுதி லுள்ள சர்க்கார் படைகள் மலைமீது ஏறி வரலாயின அதனால் நாங்கள் குன்றிலிருந்து கீழிறங்கி கோக்டே பள்ளத்தாக்கு வழியாகச் சென்று ஷான் தேசத் லுள்ள ஹேக்கோ கிராமத்திற்கருகே பதுங்கியிருக்க லாயினோம். அங்கு சமஸ்தான உத்தியோகஸ்தர் களும் கிராமத்தினரும் எங்களைப் பிடித்துக்கொண்டார்.

சாயா சான் கைதுசெய்யப்பெற்ற சமயம் நாராசக் கட்டியொன்றும். பொங்கியின் இடுப்புவாரொன்றும், கற்பதித்த (ராஜாக்கள் அணியும்) கடுக்கன் ஜதை யொன்றும், இதர சில போலி ஆபரண ஜதைகளும் அவரிடம் அகப்பட்டது.

## சாயா சான் ஓர் துறவி.

பவுண்டேயில் கைதுசெய்யப் பெற்ற சாயா சானுடைய சமையற்காரன் அவரைப்பற்றி கூறுவது யாதெனில்:—

"சாயா சானை சயாஜி என அழைக்கப் பெறுவதுண்டு. இந்த சயாஜி சுத்த துறவிக் கொள்கைகளைக் கைக்கொண்டிருந்தார். அவர் மாமிச பட்சணை மருந்

துவதில்லை. சுத்த மரக்கறிகளையே சாப்பிடுவது வழக்கம். அவருடன் தமது அரண்மனையில் இதர இருவரிருந்தனர். அவர்களே சயாஜியுடன் நெருங்கி அந்தரங்கமாகப் பேசுவதுண்டு. ஆனால் சயாஜியே சிட்போஜி என்ற சேனைத் தலைவனுக்கு உத்திரவிடுவது வழக்கம். அந்த சேனைத் தலைவன் மலையின் அடிவாரத்திலிருந்து சில சமயங்களில் மேலே அழைக்கப்பெறுவான். கீழுள்ள தமது உத்தியோகஸ்தர்கள் மூலமாகவே சயாஜியை எவரும் பார்க்க முடியும் சயாஜி நித்திரை செய்யும் பொழுது எவரும் எக்காரணத்தை முன்னிட்டும் எழுப்பலாகாதென தமது சிப்பந்திகளுக்கு கண்டிப்பாக உத்திரவிடுவார்." இந்த சமையற்காரப் பையனுக்கு வயது பதினெட்டு. பெயர் சோத்தின் இவன் கன்னிகிராமத்தினன்

## கோர்ட்டார்முன் சாயா சான்.

மாயமாக மறைந்து வாழ்ந்து பெருத்த கிளர்ச்சி செய்து கலவரம் புரிந்த சாயா சான் ஏறத்தாழ எட்டு மாதங்களுக்குப் பின்னர், பிரிட்டிஷ் ராணுவப் படையினரின் இடையறாத முயற்சியின் பயனாகப் பிடிபட்ட செய்தி, சிறப்பாக பர்மா முற்றிலும் பொதுவாக இந்தியாவிலும் உலகிலும் காட்டுத்தீபோற் பரவி, பேராச்சரியத்தையும், பெரும் பரபரப்பையும் நல்கி நின்றது.

கைதுசெய்ப்பெற்ற சாயா சானே ராணுவப் படையினர் இரங்கூனுக்குக் கொண்டுபோய் அங்கு கலவர வழக்குகள் விசாரணை செய்வதற்காக அமைக்கப் பெற்றிருக்கும் விசேஷ கோர்ட்டார் முன் ஆஜர்ப்படுத்தினர். பெருந்திரளான ஜனங்கள் நாலா பக்கங்களிலிருந்தும் இவரைப் பார்ப்பதற்காக வந்துகூடினர். அவர் அபாயக் கைதியின் அடையாளமாகிய சிவப்புச் சட்டை அணிந்திருந்தார். அவர் மெலிவாகக் காணப்பட்டபோதிலும் முகத் தெழுச்சியுடன் அதிகாரிகளைக் கண்டு புன்முறுவல் கொள்ளலாயினர். கோர்ட்டார் அனுமதியோடு, கோர்ட்டாரும் சாயா சானும் சேர்ந்த புகைப்படமொன்று சினிமாக் காட்சிக்காகப் பிடிக்கப் பட்டது. பின் கீழ்க்காணும் பிரியாது அவர்மீது கொண்டுவரப் பட்டது.

## பிரியாது.

1931-ம் வருடத்திய பர்மா கலக (விசாரணை) அவசரச் சட்டத்தின்படி அமைக்கப்பெற்ற விசேஷ டிரிபினல் முன் காமாமோவைச் சேர்ந்த மவுங் மின் வுன் என்பவருடைய குமாரன் சாயா சான்—சான்சா—சான்ஜோ—சயா மியாங்— ஊ ஞானு—என்ற பிரதிவாதிமீது செய்துகொள்ளும் பிரியாது வருமாறு:—

முதல் எதிரியான சாயா சான் சமீப கலகம் சம்பந்தமாக இனிவாவிற்கருகிலுள்ள மாஜிகோனில் ஒரு

பொங்கி மடத்திலும், இன்ஜீன் ஜில்லாவில் சவேனக் குவின் கிராமத்திலுள்ள சாயா சா வீட்டிலும், ஈந்தட் டாவிலும் 1930ஹு டிசம்பர் மாதம் சதியாலோசனை செய்யலாயினன். மேன்மை தங்கிய அரச சக்ரவர்த்திக்கு விரோதமாக அல்லது அவருடைய ஆட்சியைப் பர்மாவில் விலக்கிவிடும் நோக்குடன் போர் தொடுக்க சதி செய்யலாயினர்.

1930 ஹு டிசம்பர் மீ 14உ வாக்கில் அலங்தாங்கில் அவன் தன்னுடைய அரண்மனையை அமைக்கலாயினன். சிறியதோர் படையின் உதவிகொண்டு அலந்தாங்கை கலகக்காரர்களின் பிரதம உறைவிடமாக்கினன்.

இவனுடைய தூண்டுதலால் கலோவ்ன் சங்கங்கள் பல்வேறு கிராமங்களில் அமைக்கப் பெற்றன; இந்த சங்கங்களின் அங்கத்தினர்கள் அலந்தாங்கு சென்றனர்; அங்கு கலகப்படை சேகரிக்கப்பெற்றது.

ஏடேயைச் சேர்ந்த போத்திட் என்பவன் தலைமையிலிருந்த ஒரு கூட்டத்தினர் அதே ஊரில் டிசம்பர் மீ 22உ மவுங்போன், கேட்டு, மின்நாங் என்போரிடமிருந்த துப்பக்கிகளைக் கொள்ளயடித்துக் கொண்டு அதன் பின் அலந்தாங்கிற்குச் சென்றது விசேஷித்துக் குறிப்பிடற்குரியதாகும்.

சாயா சான் உத்திரவுப்படி இங்காக் போ சர் தலைமையில் கலகக் கூட்டத்தினர் தாராவாடியைத் தாக்கவும் தாராவாடிச் சிறையிலுள்ள கைதிகளை விட்டோட்டவும் முன்வரலாயினர்.

இக் கூட்டத்தினர் ஜேய்ன்ஸா கிராமாதிகாரி ஊப்போ நியூனே சந்தித்தனர். அவரைக் கொன்றனர். அவருடைய துப்பாக்கியை அபகரித்துக் கொண்டனர். சான்பிவின் என்பவருடைய துப்பாக்கியும் அபகரிக்கப்பட்டது. இதர இரு கிராமத்தினர் கொல்லப்பட்டனர். ஒரு குழந்தை படுகாயமுண்டது.

துப்பாக்கிகளைக் கைகொள்ளவும் எதிர்ப்போரைக் கொல்லவும் ஓண்பே என்பவன் தலைமையில் ஒரு கலகப்படையை சாயா சான் அனுப்பிவைக்கலாயினன். அதனால் இப்படையினர் லேலாங்கூ கிராமத்தைத் தாக்கினர். டெபுடி காட்டிலாகா ரேஞ்சர் மவுங் சுவேட்டுவினுடையவும் கிராமாதிகாரி மவுங் செய்னுடையவும் துப்பாக்கிகளை அபகரித்துக் கொண்டனர். கலகக்காரர் மவுங் சுவேட்டுவையும் மவுங்செய்னையும் சித்வா என்ற கிராம வாசியையும் கொலைசெய்தனர்.

கலோவ்ன் சங்க அங்கத்தினர்கள் ஏடே கிராமத்திலுள்ள தாபியாவின் குடிசையில் அன்றிரவு கூடினர்; அதிகாலையில் டெபுடி போலீஸ் சூப்பிரின்டெண்டு ஊ

மௌங் மௌங்கேலின் படையைத் தாக்கினர்; ஒரு கன்ஸ்டேபிளைக் காயப்படுத்தினர். காயமுண்ட அந்த சேவகன் மாண்டான்.

அலந்தாங்கிலிருந்து மவுங்கியான் என்ற கலகக்காரனை சாயா சான் அனுப்பி வைத்தான். அந்த மவுங் கியான் ஓன் பின்சூ கலோவ்ன் சங்கத்தின் அங்கத்தினர்களை திரட்டினன். அவனும் அவனுடைய படையினரும் இனேவாவை தீ மூட்டி சாம்பலாக்கினர்; ரயில்வே ஸ்டேஷனை சேதப்படுத்தினர்; மூவரைக் கொன்றனர். அதன் பின் தெப்பியூ கிராமத்தில் மாடா கிராமாதிகாரியான ஊ சானுடைய துப்பாக்கியை கொள்ளையடித்தனர்.

வே காட்டிலாகா பங்களாவிலுள்ள மிஸ்டர் பீல்ட்ஸ்— கிளார்க்கைத் தாக்குவதற்கு சாயா சான் டிசம்பர்மீ 24உ ஆயுதமணிந்த பலரை அனுப்பிவைக்கலாயினன். மிஸ்டர் பீல்ட்ஸ்—கிளார்க், ஒரு காட்டிலாகா ரேஞ்சர், ஒரு கிராணி கொலலப்பட்டனர். மிஸ்டர் பீல்ட்ஸ்—கிளர்க்கின் துப்பாக்கி, ரிவால்வர் தோட்டாக்கள் முதலியனவும், அவருடைய இதர சாமான்களும் யானைகளும் அபகரிக்கப் பெற்றன.

சாயா சான் உத்திரவுப்படி டிசம்பர்மீ 25உ பெருத்ததோர் கலகக் கூட்டத்தினர் டெபுடி போலீஸ்

சூப்பரின்டெண்டு ஊ மௌங் மௌங்கேலின் பன
யைத் தாக்கினர். கலகக்காரர் ஊ மௌங் மௌங்கே
கொன்றனர். அவருடைய ரைபிலேயும், ரிவால்வ
யும் கைபற்றினர். சர்க்காரின் தோட்டாக்களை
அபகரித்துக் கொண்டார்.


1930 ஆம் டிசம்பர் மீ 30உ பெருத்த
கலகப்படை மேஜர் ஹேர் தலைமையிலிருந்த ப
யப் பட்டாளத்தை தாக்கியது. கலகப்படை
டிக்கப்பட்டது.

மிஸ்டர் பீல்ட்ஸ்— கிளார்க்கின் தொப்
ஒரு கலகத தலைவன் அணிந்திருந்தான்.
பாஸ்விஜோ போரில் கொல்லப்பட்டான்
கிடைத்தது.

பர்மா ரைபில்ஸ் பட்டாளம் 1930ஆம்
பர்மீ 31உ அலங்தாங்கைத் தாக்கியது; கலகக்
டத்தை சிதறடித்தது. அங்கு கொள்ளையடி
ப்பட்ட சொத்துக்களில் சில அகப்பட்டன.

அதனால் சாயா சான் பலாத்காரமுடன்
கல் கவர்ன்மெண்டை ஸ்தம்பிக்கச் செய்ய முயற
தான்; போர் தொடுக்க சதியாலோசனை புரிந்தான்; அ
க்காக ஆட்களையும் ஆயுதங்களையும் இதர பேர்த்

பர்மா பிரிவினை கட்சித் தலைவர்.



ஊ—பா—பே B. A., M L. C.

ாடங்களையும் சேகரிக்கலாயினன். இவன் இ. பி. கோ. 21, 121 எ, 122-வது செக்ஷன்களின்படி தண்டனை தள்ளாக வேண்டியவனாகின்றான்.

சாயா சானுக்காக இரங்கூன் ஹைகோர்ட் வழக் கிஞர்களில் பிரபலஸ்தர்களான மூவர் ஆஜராயிருந் னர்.

விசேஷக் கோர்ட்டார் விசாரணை செய்து, அவருக் த் தூக்குத் தண்டனை விதித்தனர். ஹைகோர்ட் கு அப்பீல் செய்தும் அதுவும் தள்ளுபடியாயிற்று. ப்பொழுது மன்னர் பிரானின் விருந்தினராக இருந் வருகிறார். இவர் தூக்குற்று இறக்க நேரினும் ருங்காலத்திலெழுதப்படும் பர்மியச் சரித்திரத்தில், லக வல்லரசுகளில் சிறந்ததாகக் கணிக்கப்படும் பிரிட் டிஷ் அரசாங்கத்தோடு போராடிய பெருமை வாய்ந்த இவர் பெயர் முதன்மைஸ்தானம் பெறுமென்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

## அரசியல் நிலைமை.

உலகத்தில் புரட்சியினால் ஜனசமூகம் முன்னேற் றமடைய முடியுமென்பதில்எட்டுணையும் சந்தேகமில்லை.

பல தேசங்கள் புரட்சிசெய்து விடுதலைபெற்ற செய்தி
உலகறிந்த விஷயமே. புரட்சியின் வெற்றிக்கு
பொதுமக்களின் ஒற்றுமையும் உணர்ச்சியும் ஊக்கமு
உழைப்பும் இன்றியமையாதவைகளாகும். ஆன
பர்மாவைப் பொறுத்தமட்டில் பலதிறப்பட்ட அரசிய
அபிப்பிராயங்களிருப்பதால் புரட்சி இயக்கம் அங்
வேரூன்றி வெற்றிபெறச் சாத்தியப்படவில்லை. அதே
அங்கு தோன்றிய புரட்சி கேவலம் குழப்பமாக மா
யாதொரு பயனையும் விளைவியாது பொது மக்களுக்கு
அரசாங்கத்திற்கும் கஷ்டநஷ்டங்களைக் கொடுத்
வருங்கால வாழ்க்கையையும் பரிதாபத்திற் கிடம
கிற்று.

குழப்பங்களும் கொள்ளைகளும் கொலைகளும் தலை
விரித்துத் தாண்டவமாடுகின்ற காலத்தில் நான் பர்மா
நாடு செல்ல நேர்ந்தது. அங்கு அபிப்பிராய பேதங்
கொண்ட பல அரசியல் தலைவர்களைப் பார்க்கும் சந்தர்ப்
பங்கிட்டிற்று. பர்மாப் பிரிவினைக் கட்சித் தலைவரும்
இந்தியர்கட்கு எதிர்ப் பிரசாரம் செய்கின்றவரென்று
கருதப்படுகின்றவருமாகிய ஊ-பா-பே என்ற பர்மியத்
தலைவரைச் சந்தித்து கலவர சம்பந்தமாகப் பேசிக்

கொண்டிருக்கும் பொழுது பர்மிய அரசியல் நிலைமையைப் பற்றி அவர் கூறிய அபிப்பிராயம் பின்வருமாறு:-

"பர்மாவை இந்தியாவிலிருந்து பிரித்துவிட்டால் இந்தியர்களின் நிலைமை என்னவாகும்" என்று வினவினேன். அதற்கு தலைவர் ஊ-பா-பே "பிரிவினை ஏற்பட்டால் இந்தியர்கட்கு பலவித கஷ்டங்கள் நேரிடலாமென்ற தப்பான அபிப்பிராயம் அநேகருக்கு இருந்து வருகின்றது. ஆனால் அதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. நான் இந்தியர்களின் விரோதியென்று பலர் எண்ணுகின்றனர். அது முற்றிலும் தவறு. இந்தியர்கள்மீது எனக்கு எவ்விதமான துவேஷமும் கிடையாது. நான் என்னுடைய தாய்நாட்டை நேசிக்கின்றேன். அதற்காகவே பிரிவினை வேண்டுமென்று உழைக்கின்றேன். பிரிவினை ஏற்பட்டால் பர்மா அரசாங்கம் அன்னிய நாட்டு மக்களைப் பொறுத்தமட்டில் ஏறக்குறைய பிரெஞ்சு, அமெரிக்கா, தேச அரசியலைப் பின்பற்றும்.

பிரிவினை ஏற்பட்டால் (1) பர்மா நாட்டில் பிறந்த சுதேசி (Natives)களும் (2) வெளிநாட்டிலிருந்து

குடியேறியவர் (Aliens)களுமான இரண்டு வகுப் பார்கள் தான் இருப்பார்கள். பிரிவினைக்குப் பின்னர் நாங்கள் ஏற்படுத்தப் போகும் சட்டதிட்டங்களை இப் பொழுது கூறமுடியாது. ஆனால் ஆறுமாதங்கட்குக் குறையாமல் இங்கு தங்கியிருந்து தொழில்செய்யும் அன்னிய நாட்டினர் (Citizenship) நகர வாசி என் னும் உரிமையைப் பெற்றுவிட்டால் எங்களுக்குள்ள எல் லாவித உரிமைகளும் அவர்கட்கும் இருக்கலாம் என்று நான் நினைக்கின்றேன்.

அன்னிய நாட்டினரின் (ஆங்கிலேயர் உள்பட) ஆதிக்கத்தினால்தான் எங்கள் நாடு வறுமை வாய்ப்பட் டிருக்கின்றது. எங்கள் நாட்டை நாங்கள் தான் ஆள வேண்டுமென்ற உணர்ச்சி எங்கட்கு ஏற்பட்டிருக்கின் றது. பிரிவினையை எதிர்க்கும் கட்சியாருக்கும் எங்கட் கும் கொள்கைகளில் அதிகமான வித்தியாசமில்லை. நாங்கள் இருகட்சியாரும் எங்கள் நாடு சுதந்திரமடைய வேண்டுமென்ற ஒரே லக்ஷியத்திற்காகவே உழைக்கின் றோம். பிரிவினை ஏற்பட்டால் அரசாங்கத்தினர் எங் கட்கு சுதந்திர மளிக்கமாட்டாரெனக் கூறும் கூற்றை நான் நம்பவில்லை. ஒரு தேசம் விடுதலையடைய வேண்

## தாராவாடி தனிக்காட்டு ராஜா



# சாயா சான்

பர்மாக் கலகத் தலைவன்.

டமொனுல் மற்றொரு தேசத்தின் உதவிவேண்டுமென்று கூறுவதில் அர்த்தமில்லை. அதைப்போன்று பர்மா நாடு விடுதலையடைய இந்தியாவின் உதவி தேவையில்லை யென்று நான் கருதுகின்றேன். காலஞ்சென்ற இந்திய தேசிய வீரரும், சிறந்த அரசியல் ஞானியுமான கோபால கிருஷ்ண கோகலே, பர்மாவை இந்தியாவுடன் பிணைத்ததைக் கண்டித்து, பர்மாவை பிரிக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டிருக்கின்றாரென்பதை நான் உங்கட்கு ஞாபகப்படுத்துகின்றேன்.

இந்தக் கலவரம் இந்தியர்கட்கு விரோதமாக ஏற்பட்டிருக்கின்றது என்று இந்தியத் தலைவர்களும் மற்றும் சிலரும் கருதுவது உண்மைக்கு முரண்பட்டதாகும். இந்தியர்கள் அநேகமான கஷ்டநஷ்டங்களை அனுபவித்திருக்கின்றனர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும், ஆனுல் என்னுடைய ஜாதியினரும் சைனுக்காரரும் இக்கலவரத்தில் துன்ப மனுபவித்திருக்கின்றனர். கலவரம் ஏற்பட்ட சில மாதங்கட்கு பின்னர் கலவரத்தை அடக்குவதற்கு பர்மா அரசாங்கத்தாருக்கு ஓர் யோசனை கூறினேன். அதாவது ஆயுத பலத்தினுல் கலவரத்தை அடக்குவதைவிட பட்டாளத்

திற்கு செலவுசெய்யும் பொருளை வறுமையினால் வாடும். உழவர்கட்கு கடனாகக்கொடுத்து உதவவேண்டுமென்பதே.

அன்றியும் கைதிகளாக விருக்கும் கலகக்காரர்களை விடுதலை செய்யவேண்டுமென்று நான் கூறினேன். அப்பொழுது அரசாங்கத்தார் எனது வார்த்தைகட்கு செவி சாய்க்கவில்லை. ஆனால் கலவரம் அதிகமாகி ஆறுமாதங்கள் சென்ற பின்னரே, அரசாங்கத்தினர் உணர்ந்து நான் கூறிய வழிகளில் கவனம் செலுத்தி வருகின்றனர். எனவே கலகம் கூடிய சீக்கிரம் அடங்கிவிடுமென்று நான் கருதுகின்றேன். நெல் விலையின் இறக்கத்தினால் வறுமையின் கொடுமை அதன் உச்சஸ்தானத்தை அடைந்திருக்கின்றது. நாட்டுக்கோட்டைச் செடியார்களிடம் எனக்கு நெருங்கிய பழக்கமுண்டு. அவர்களின் தொழில் முறைகளை நான் நன்கறிவேன். அவர்களுடைய தற்கால நிலைமையைப் பற்றி நான் மிகவும் வருந்துகின்றேன். பொருளாதார நெருக்கடி ஒழிந்தாலொழிய பர்மா நாட்டில் சமாதான மேற்படாது."

## பின்னுரை.

சாயா சான் பிடிபட்டார்; ஆனால் இன்னும் கலவரம் ஒழிந்தபாடில்லை. அரசாங்கத்தார் சட்டத்தையும் சமாதானத்தையும் நிலை நாட்ட வேண்டிய முயற்சி செய்து வருகின்றனர். பொருளாதார நெருக்கடியும் வியாபார மந்தமும் ஒழிந்து அரசியல் சீர்திருத்தம் ஏற்பட்டாலன்றி, பர்மிய நாட்டில் சமாதானமுண்டாகாதென்பது திண்ணம். அதற்காக அரசாங்கத்தினர் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சி பயன்பெறப் பிரார்த்திக்கின்றோம்.

## எதிர்பாருங்கள் !

## "பர்மாத் தலவரம்"

என்ற காலத்துக் கேற்ற அழகிய புத்தக மொன்று "சாயா சான்" என்ற நூலின் ஆசிரியர் திரு, வி. ஜி. நாயரால் எழுதப் பெற்று அச்சிலிருக்கின்றது. அப்புத்தகத்தில் பர்மாவின் முற்கால தற்கால சரித்திரங்கள், பர்மாப் பிரிவினை, அரசியல் நிலைமை, நகரத்தார்களின் தொழில் முதலிய பல அரிய விஷயங்கள் வெளிவருகின்றன. திரு, V. R. M. செட்டியார், B. A. அவர்கள் முன்னுரை எழுதியுள்ளார்கள். சுமார் முப்பது ஆப்டோன் படங்களுடன் இன்னும் சில வாரங்களில் வெளிவரும்.

விலை ரூ. 1—8—0 தான்.